முருகப்பெருமான் துணை

**மகான் அருள்நந்தி சிவாச்சாரியார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**22.12.2023**, வெள்ளிக்கிழமை

1. அன்னதான ஞான வள்ளலே
அருளமுதுதந்து உலகோர்க்கு
இன்னல் போக்கும் வரத்தை
இலகுவாய் அருளும் அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது சிலை திங்கள்
வரங்களென சஷ்டிதிகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 06 ம் நாள், 22.12.2023, வெள்ளிக்கிழமை)
வழங்குவேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை அருள்நந்தி சிவாச்சாரியாரும்
அகிலமே பாதுகாப்புற உரைப்பேன்
வாசிவெல்லும் மகா பலத்தை
வரமாகத் தீட்சையாக அருளும்
4. அருளும் அரங்கன் திருவடிபற்றி
அகிலத்தார் பிரணவக் குடில் நோக்கி
வரம் கேட்டு வந்து சரணடைய
வணங்கி அரங்கன் தருமத்தில்
5. தருமத்தில் பொருளுதவி செய்து
தக்கபடி சுத்த சைவநெறி ஏற்று
பெருமைபட ஞானிகள் பேரிலே
பூசை செய்து வணங்கி வர
6. வருகவே சத்ருருண ரோக
**(சத்ரு – பகை, ருணம் – கடன், ரோகம் – நோய்)**
வகையிலா சோடை விலகி
கருமவினை வழி அனைத்து
கட்டங்களும் விலகி மாற்றம்

7. மாற்றம் ஆரோக்கியம் திடமாக
மனபலம் ஆயுள் கீர்த்திபட
ஆற்றலுடன் தேகதிடம் சகலவளம்
அடைந்து சிறந்து நிற்பர்

8. நிற்கவே அரங்கமகான் மூலம்
நிலவுலகில் மெய் சீடர்களெனும்
அற்புதமான அடையாளம் கூடி
அனைவரும் தேற்றம் காண்பர்

9. காண்கவே தனதேட்டு பலமுடன்
கந்தப் பெருமானை வணங்கும்
ஆன்மீக ஞான வழி கிட்டி
அகிலத்தில் சூட்சும பலம் அடைவர்

10. அடையவே அரங்கமகானின் தேடலில்
அனுகுவார் அனைத்து பேருமே
தடையற ஞானிகள் எனும்
தனிப்பெரும் அடையாளம் கூடி

11. கூடியே உலக மாற்றம் தன்னை
குருவரங்கன் நோக்கம் தன்னை
நாடியே பூர்த்தி செய்வர்
ஞான ஆட்சி ஞானிகள் ஆட்சியாக
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–